1972 மார்ச் 18]

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், ஏற்கனவே, இந்தத் தொழிலாளர்கள் இரண்டு பகுதிகளாக, லைசென்ஸ் உள்ளவர்கள், லைசென்ஸ் இல்லாதவர்கள் என்ற முறையில் பாகுபாடு ஏற்பட்டு மத்திய அரசாங்கத்திற்கு மனுச் செய்ததன்மேல் ஏற்றுமதி வசதியெல்லாம் கொடுக்கப்பட்டது. அது தொடர்ந்து இருக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் சில விதிமுறைகளை வைத்திருக்கிறது. அதிலே பாதகம் இருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, 4,000 ஏக்கர்கள் கையகப்படுத்தத் திட்டமிட்டிருக்கிறது. இதனால் பாதிக்கப்படுபவர்களுக்கு மாற்று இடங்கள் கொடுப்பதற்கு அரசாங்கம் என்னென்ன வழிவகை செய்திருக்கிறது என்பதை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதற்கென்று ஒரு நிபுணர் அமைக்கப்பட்டு, அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள் அரசாங்கத்திலே. நெல்லை மாவட்டம், இராமநாதபுரம் மாவட்ட கடற்கரை ஓரங்களில் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் புதிதாக உப்பளத்திற்குப் பயன்படுத்த முடியும் என்று கொடுத்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க வாய்ப்பு இருக்கும். ஆனால் அவர்கள் கூறுவது அந்த இடத்திலே பல ஆண்டுகளாகத் தொழிலில் ஈடுபட்டிருப்பதால் உடனடியாக வெளியேற்றினால் பாதகம் ஏற்படும் என்று சொல்கிறார்கள். அந்த உறுதிமொழியைத்தான் கொடுத்திருக்கிறது, உடனடியாக வெளியேற்ற மாட்டோம், இன்றியமையாத வகையில், அதே இடத்தில் துறைமுகம் ஏற்பட்டாலொழிய வெளியேற்ற மாட்டோம் என்ற உறுதியைத் தந்திருக்கிறது.

Dams

* 559. Q.—Thiru B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any proposal pending with the Government to restore breached anicut at South Pennar near Thorapally Agraharam in Hosur Taluk of Dharmapuri district; and

(b) if so, when it will be constructed?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா :

(அ) ஆம்.

(இ) இத்திட்டம், சேலம் புலனாய்வுக் கோட்டச் செயற் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, it is a small anicut, but is a very useful one. It breached 10 years back and since then people could not raise any wet crops. Investigation for the renovation work has since been completed, I understand. May I know from the Hon. Minister whether he would see that orders are issued for the repair of that dam?

THE HON THIRU S. J. SADIQ PASHA : Sir, the scheme for the work has been included in the Master Plan for work in Drought-affected areas for Dharmapuri district, and it has been sent to the Government of India for approval. The work will be taken up as soon as administrative sanction is received from the Government of India.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Sir, May I know from the Hon. Minister when the scheme was submitted to the Government of India and when a reply is expected?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The reply is expected within a few months.

*560 வின.—திரு. மே. சி. தூயமணி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

மேட்டுப்பாளையம் தொகுதியைச் சார்ந்த தோலம்பாளையம் பகுதியில் கட்டவிருந்த பெரும்பள்ள அணைத்திட்டம் தற்போது எந் நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : எவ்வளவு பாசன வசதி பெறக்கூடும் என்பது பற்றி வாரியம் எழுப்பிய சில ஐயப் பாடுகள் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளன.

திரு. மே. சி. தூயமணி : மேட்டுப்பாளையம் தொகுதியைச் சார்ந்த தோலம்பாளையம் பெரும்பள்ள அணைத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று பல ஆண்டுகாலமாக அந்தப் பகுதி